# Monthly Quiz File – September 2026

1. The CSIR-National Physical Laboratory, which maintains the national time scale used for official IST, is located in

A) Ahmedabad

B) New Delhi

C) Allahabad

D) Mirzapur

அதிகாரப்பூர்வ இந்திய திட்ட நேரத்திற்குப் (IST) பயன்படுத்தப்படும் தேசிய நேர அளவைப் பராமரிக்கும் CSIR-தேசிய இயற்பியல் ஆய்வகம் (CSIR-NPL) எங்கு அமைந்து உள்ளது?

A) அகமதாபாத்

B) புது தில்லி

C) அலகாபாத்

D) மிர்சாபூர்

2. The COP17 of UNCCD was held in

A) Havana

B) Rome

C) Mongolia

D) Brazil

பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCCD) 17வது பருவநிலை உச்சி மாநாடு (COP17) எங்கு நடத்தப் பட்டது?

A) ஹவானா

B) ரோம்

C) மங்கோலியா

D) பிரேசில்

3. Choose the correct statement regarding TIDCO.

A) TIDCO was established in 1965 to drive the industrial growth of Tamil Nadu.

B) It works primarily through Public-Private Partnerships (PPP) and joint ventures.

C) It is the state nodal agency tasked with establishing the TN Defence Industrial Co rridor.

D) All the statements are correct.

டிட்கோ (TIDCO) தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக டிட்கோ 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

B) இது முதன்மையாக பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மற்றும் கூட்டு முயற்சிகள் மூலம் செயல்படுகிறது.

C) தமிழ்நாடு பாதுகாப்புத் தொழில்வழித்தடத்தை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ள மாநிலத்தின் தலைமை முகமையாக இது செயல்படுகிறது.

D) மேற்கண்ட அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

4. The World's Soil Resources 2026 report was released by

A) FAO

B) UNDP

C) UNEP

D) UNCCD

உலகின் மண் வளங்கள் 2026 என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

A) FAO

B) UNDP

C) UNEP

D) UNCCD

5. National Small Industry Day is observed on

A) August 28

B) August 30

C) September 02

D) September 03

தேசிய சிறுதொழிலகங்கள் தினம் எப்போது அனுசரிக்கப் படுகிறது?

A) ஆகஸ்ட் 28

B) ஆகஸ்ட் 30

C) செப்டம்பர் 02

D) செப்டம்பர் 03

6. The Namdapha National Park is located in

A) Assam

B) Meghalaya

C) Arunachal Pradesh

D) Sikkim

நம்தாபா தேசியப் பூங்கா எங்கு அமைந்துள்ளது?

A) அசாம்

B) மேகாலயா

C) அருணாச்சலப் பிரதேசம்

D) சிக்கிம்

7. The Aral Sea has a border with

A) Kazakhstan and Uzbekistan

B) Kazakhstan and Tajikistan

C) Uzbekistan and Kyrgyzstan

D) Kyrgyzstan and Kazakhstan

ஏரல் கடல் எந்த நாடுகளுடன் எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது?

A) கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான்

B) கஜகஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான்

C) உஸ்பெகிஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான்

D) கிர்கிஸ்தான் மற்றும் கஜகஸ்தான்

8. Which country's voters recently rejected a proposal on joining the European Union (EU)?

A) Norway

B) Iceland

C) Switzerland

D) Greenland

ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) இணைவதற்கான முன்மொழிவை சமீபத்தில் எந்த நாட்டு வாக்காளர்கள் நிராகரித்தனர்?

A) நார்வே

B) ஐஸ்லாந்து

C) சுவிட்சர்லாந்து

D) கிரீன்லாந்து

9. The Nancy Grace Roman Space Telescope will be launched by

A) DLR - Germany

B) CNES - France

C) NASA

D) ESA

நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கியை விண்ணில் செலுத்த உள்ள அமைப்பு எது?

A) DLR - ஜெர்மனி

B) CNES - பிரான்ஸ்

C) NASA

D) ESA

10. Which of the following board not work under the Ministry of Agriculture and Farmers Welfare?

A) Coconut Development Board

B) National Horticulture Board

C) National Oilseeds and Vegetable Oils Development (NOVOD) Board

D) National Turmeric Board

பின்வரும் வாரியங்களில் எது வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் செயல்படவில்லை?

A) தென்னை மேம்பாட்டு வாரியம்

B) தேசிய தோட்டக்கலை வாரியம்

C) தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறி எண்ணெய்கள் மேம்பாட்டு (NOVOD) வாரியம்

D) தேசிய மஞ்சள் வாரியம்

11. The Super Garuda Shield 2026 multinational joint military exercise is led by

A) Indonesia – USA

B) USA – Australia

C) USA – Singapore

D) Singapore – Australia

2026 ஆம் ஆண்டுக்கான சூப்பர் கருடா ஷீல்ட் எனும் பன்னாட்டு கூட்டு இராணுவப் பயிற்சியை நடத்தும் நாடுகள் எவை?

A) இந்தோனேசியா – அமெரிக்கா

B) அமெரிக்கா – ஆஸ்திரேலியா

C) அமெரிக்கா – சிங்கப்பூர்

D) சிங்கப்பூர் – ஆஸ்திரேலியா

12. Choose the incorrect statement regarding Neelakurinji (Strobilanthes kunthiana).

A) After blooming the mass carpets of violet-blue flowers, the plant dies

B) It is a native shrub that grows exclusively in the Western Ghats

C) The species name kunthiana is derived from the Kunthi River

D) All the statements are correct

நீலக்குறிஞ்சி (ஸ்ட்ரோபிலாந்தஸ் குந்தியானா) தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) ஊதா-நீல நிறப் பூக்கள் பெருமளவில் பூத்த பிறகு, இந்தத் தாவரம் இறந்து விடும்.

B) இது மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே பிரத்தியேகமாக வளரும் ஒரு பூர்வீகப் புதர்ச் செடியாகும்.

C) குந்தியானா என்ற இதன் சிற்றினப் பெயர் குந்தி நதியிலிருந்து உருவானது.

D) மேற்கண்ட அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

13. The 26th Shanghai Cooperation Organisation (SCO) Summit was held in

A) Astana

B) Qingdao

C) Bishkek

D) Shanghai

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 26வது உச்சிமாநாடு எங்கு நடத்தப் பட்டது?

A) அஸ்தானா

B) கிங்டாவோ

C) பிஷ்கெக்

D) ஷாங்காய்

14. The Chennai Metropolitan Development Authority (CMDA) was established under

A) Tamil Nadu Town and Country Planning Act, 1971

B) Tamil Nadu Regional and Town Planning Act, 1966

C) Tamil Nadu Town Planning and Urban Development Act, 1976

D) Tamil Nadu Metropolitan Development Act, 1961

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) எந்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது?

A) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971

B) தமிழ்நாடு பிராந்திய மற்றும் நகரமைப்பு சட்டம், 1966

C) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுச் சட்டம், 1976

D) தமிழ்நாடு பெருநகர வளர்ச்சி சட்டம், 1961

15. Recently, the Sone River Water Pact was signed between

A) Chhattisgarh and Madhya Pradesh

B) Uttar Pradesh and Jharkhand

C) Bihar and Jharkhand

D) Madhya Pradesh and Uttar Pradesh

சமீபத்தில், சோன் நதி நீர் ஒப்பந்தம் எந்த மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது?

A) சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேசம்

B) உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட்

C) பீகார் மற்றும் ஜார்க்கண்ட்

D) மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம்

16. Vetri Kaivinai Kalaignargal Thittam will provide loan assistance of up to ____, with a _____ subsidy.

A) 5 Lakh and 25%

B) 8 Lakh and 33%

C) 10 Lakh and 50%

D) 15 Lakh and 50%

வெற்றி கைவினை கலைஞர்கள் திட்டமானது ____ வரையிலான கடன் உதவியை, ____ மானியத்துடன் வழங்கும்.

A) 5 லட்சம் மற்றும் 25%

B) 8 லட்சம் மற்றும் 33%

C) 10 லட்சம் மற்றும் 50%

D) 15 லட்சம் மற்றும் 50%

17. Choose the incorrect statement regarding India's Coconut production.

A) India is the world's second-largest coconut producer now.

B) 4 South Indian states together account for above 90% of India's coconut production.

C) The Coconut Development Board (CDB) is a statutory body

D) All the statements are correct.

இந்தியாவின் தேங்காய் உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இந்தியா தற்போது உலகின் இரண்டாவது மிகப்பெரிய தேங்காய் உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது.

B) தென்னிந்தியாவைச் சேர்ந்த 4 மாநிலங்கள் கூட்டாக இந்தியாவின் தேங்காய் உற்பத்தியில் 90%க்கும் அதிகமான பங்களிப்பைக் கொண்டுள்ளன.

C) தென்னை மேம்பாட்டு வாரியம் (CDB) என்பது ஒரு சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

D) மேற்கண்ட அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

18. Recently described Liocheles gracilipalpus is a species of

A) Spider

B) Scorpion

C) Snail

D) Frog

சமீபத்தில் கண்டறியப்பட்ட 'லியோகெலெஸ் கிராசிலிபால்பஸ்' (Liocheles gracilipalpus) என்பது எந்த உயிரினமாகும்?

A) சிலந்தி

B) தேள்

C) நத்தை

D) தவளை

19. Tamil Nadu government plans to establish Silk Export Trade Facilitation Centre in

A) Thirubuvanam

B) Arani

C) Rasipuram

D) Kancheepuram

தமிழ்நாடு அரசு பட்டு ஏற்றுமதி வர்த்தக வசதி மையத்தை எங்கு நிறுவத் திட்டமிட்டு உள்ளது?

A) திருபுவனம்

B) ஆரணி

C) ராசிபுரம்

D) காஞ்சிபுரம்

20. The Vettri Karangal Scheme provides skill training to

A) Craftsmen

B) Weavers

C) Construction Workers

D) CNC Operators

வெற்றி கரங்கள் திட்டம் யாருக்கு திறன் பயிற்சியை வழங்குகிறது?

A) கைவினைஞர்கள்

B) நெசவாளர்கள்

C) கட்டுமானத் தொழிலாளர்கள்

D) CNC இயந்திர இயக்குபவர்கள்

21. The Artemis Accords is related to

A) Deep ocean Exploration

B) Space exploration

C) Polar Ice caps

D) Swam Drones

ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்கள் என்பது எதனுடன் தொடர்புடையவை?

A) ஆழ்கடல் ஆய்வு

B) விண்வெளி ஆய்வு

C) துருவப் பனிக்கட்டிகள்

D) ஆளில்லா விமான திரள்கள்

22. Choose the incorrect statement regarding the National Register of Citizens (NRC).

A) NRC is a record containing the names of genuine Indian citizens residing in the country.

B) The only time a nationwide NRC was compiled was in 1951.

C) The Assam Accord 1985 set March 24, 1971, as the legal cut-off date.

D) All the statements are correct.

தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) என்பது நாட்டில் வசிக்கும் உண்மையான இந்திய குடிமக்களின் பெயர்களைக் கொண்ட ஒரு பதிவேடு ஆகும்.

B) நாடு முழுவதும் 1951 ஆம் ஆண்டில் மட்டுமே தேசிய குடிமக்கள் பதிவேடு தொகுக்கப்பட்டது.

C) 1985 ஆம் ஆண்டின் அசாம் ஒப்பந்தம் 1971 ஆம் ஆண்டு மார்ச் 24 என்பதைச் சட்டப் பூர்வமான இறுதித் தேதியாக நிர்ணயித்தது.

D) மேற்கண்ட அனைத்து கூற்றுகளும் சரியானவை.

23. The Article 348(2) of the Constitution is governing the ________.

A) Location and seat of the High Courts

B) Language used in High Courts

C) Sanctioned strength of judges

D) Transfer of a High Court judge

அரசியலமைப்பின் சரத்து 348(2) எதை நிர்வகிக்கிறது?

A) உயர் நீதிமன்றங்களின் அமைவிடம் மற்றும் அமர்வு

B) உயர் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் மொழி

C) நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை

D) உயர் நீதிமன்ற நீதிபதி பணியிட மாற்றம்

24. Bishkek Declaration 2026 was recently adopted by

A) UNCCD

B) UNDP

C) BRICS

D) SCO

பிஷ்கெக் பிரகடனம் 2026-ஐ சமீபத்தில் ஏற்றுக் கொண்ட அமைப்பு எது?

A) UNCCD

B) UNDP

C) BRICS

D) SCO

25. Which one of the following is not the recipient of the Ramon Magsaysay Award 2026?

A) Tommy Koh

B) Jose Ramos

C) Bo Kyi

D) Runa Khan

பின்வருபவர்களில் 2026 ஆம் ஆண்டிற்கான ராமன் மகசேசே விருதைப் பெறாதவர் யார்?

A) டாமி கோ

B) ஜோஸ் ராமோஸ்

C) போ கியி

D) ருனா கான்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ***B*** | 2. | ***C*** | 3. | ***D*** | 4. | ***A*** | 5. | ***B*** | 6. | ***C*** | 7. | ***A*** | 8. | ***B*** | 9. | ***C*** | 10. | ***D*** |
| 11. | ***A*** | 12. | ***D*** | 13. | ***C*** | 14. | ***A*** | 15. | ***C*** | 16. | ***C*** | 17. | ***A*** | 18. | ***B*** | 19. | ***D*** | 20. | ***C*** |
| 21. | ***B*** | 22. | ***D*** | 23. | ***B*** | 24. | ***D*** | 25. | ***B*** | | | | | | | | | | |

26. The Arjun Vahini disaster response squad was launched by

A) Bihar

B) Uttar Pradesh

C) Himachal Pradesh

D) West Bengal

அர்ஜுன் வாகினி பேரிடர் மீட்புக் குழு தொடங்கப்பட்ட மாநிலம் எது?

A) பீகார்

B) உத்தரப் பிரதேசம்

C) ஹிமாச்சலப் பிரதேசம்

D) மேற்கு வங்கம்

27. Article 316(3) of the Indian Constitution deals with

A) Re-appointment of member of a Public Service Commission

B) Re-appointment of Chairman of a Public Service Commission

C) Salary and Allowance

D) Removing Procedure

இந்திய அரசியலமைப்பின் சரத்து 316(3) எதைப் பற்றிக் கூறுகிறது?

A) அரசுப் பணியாளர் தேர்வாணைய உறுப்பினரின் மறுநியமனம்

B) அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவரின் மறுநியமனம்

C) சம்பளம் மற்றும் படிகள்

D) நீக்கம் செய்யும் நடைமுறை

28. The Anak Krakatau volcano is located in

A) Italy

B) Indonesia

C) Huawei

D) Japan

அனக் க்ரக்கடோவா எரிமலை அமைந்துள்ள நாடு எது?

A) இத்தாலி

B) இந்தோனேசியா

C) ஹவாய்

D) ஜப்பான்

29. Kharg Island is a continental island of ___________.

A) Japan

B) New Zealand

C) Iran

D) Madagascar

கார்க் தீவு என்பது ___________ நாட்டின் ஒரு கண்டத்தீவு ஆகும்.

A) ஜப்பான்

B) நியூசிலாந்து

C) ஈரான்

D) மடகாஸ்கர்

30. Direct tax buoyancy compares the growth in direct tax revenue with the growth in _________.

A) Nominal GDP

B) Per Capita Income

C) Net National Product

D) Gross National Product

நேரடி வரி நெகிழ்வுத் தன்மை என்பது நேரடி வரி வருவாய் வளர்ச்சியை _________ வளர்ச்சியோடு ஒப்பிடுகிறது.

A) பெயரளவு GDP

B) தனிநபர் வருமானம்

C) நிகர தேசிய உற்பத்தி

D) மொத்த தேசிய உற்பத்தி

31. India aims to bring human rabies deaths to zero by ____________

A) 2045

B) 2047

C) 2030

D) 2035

எந்த ஆண்டிற்குள் மனிதர்களுக்கு ஏற்படும் வெறிநாய்க்கடி மரணங்களை பூஜ்ஜியத்திற்குக் கொண்டுவர இந்தியா இலக்கு வைத்துள்ளது?

A) 2045

B) 2047

C) 2030

D) 2035

32. Choose the incorrect pair.

A) Article 371A - Nagaland

B) Article 371B - Assam

C) Article 371F - Manipur

D) Article 371H - Arunachal Pradesh

தவறான இணையினைத் தேர்ந்தெடுக்க.

A) சரத்து 371A - நாகாலாந்து

B) சரத்து 371B - அஸ்ஸாம்

C) சரத்து 371F - மணிப்பூர்

D) சரத்து 371H - அருணாச்சலப் பிரதேசம்

33. Khagantak-243, the indigenous, 300 kg-class airborne long-range glide bomb, was developed by

A) India

B) Russia

C) Iran

D) Ukraine

300 கிலோ எடையுள்ள, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வான்வழி நீண்ட தூர மிதவை குண்டான ககாந்தக்-243-ஐ உருவாக்கிய நாடு எது?

A) இந்தியா

B) ரஷ்யா

C) ஈரான்

D) உக்ரைன்

34. The Tamil Nadu State Planning Commission (SPC) was constituted on

A) May 25, 1967

B) May 25, 1969

C) May 25, 1971

D) May 25, 1976

தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு (SPC) அமைக்கப்பட்ட நாள் எது?

A) மே 25, 1967

B) மே 25, 1969

C) மே 25, 1971

D) மே 25, 1976

35. Choose the incorrect statement regarding Dr. Sarvepalli Radhakrishnan.

A) He served as India's first Vice President (1952–1962)

B) He served as India's Ambassador to the UN (1949–1952)

C) He received the Bharat Ratna in 1954.

D) All the statements are correct.

டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் பற்றிய கூற்றுகளில் தவறானதைத் தேர்ந்தெடுக்க.

A) இவர் இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத் தலைவராக (1952–1962) பணியாற்றினார்.

B) இவர் ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் தூதராக (1949–1952) பணியாற்றினார்.

C) இவர் 1954 ஆம் ஆண்டில் பாரத ரத்னா விருது பெற்றார்.

D) அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

36. The UN has declared ________as the International Day for the Elimination of Child, Early and Forced Marriage.

A) August 27

B) September 27

C) November 27

D) January 27

ஐக்கிய நாடுகள் சபை எந்தத் தேதியை குழந்தைகளுக்கான முன்கூட்டிய மற்றும் கட்டாயத் திருமணங்களை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாக அறிவித்துள்ளது?

A) ஆகஸ்ட் 27

B) செப்டம்பர் 27

C) நவம்பர் 27

D) ஜனவரி 27

37. Choose the incorrect statement regarding Kākāpō.

A) Kākāpō is the world's heaviest parrot.

B) It is classified as Critically Endangered.

C) They are flightless parrots and native to New Zealand

D) All the statements are correct.

காகாபோ பற்றிய தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) காகாபோ என்பது உலகின் மிக அதிக எடை கொண்ட கிளி இனமாகும்.

B) இது மிகவும் அருகி வரும் இனமாக (Critically Endangered) வகைப்படுத்தப்பட்டுள்ளது.

C) பறக்க முடியாத கிளிகளான இவை நியூசிலாந்தை தாயகமாகக் கொண்டவை.

D) அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

38. Shako Chho Lake, a high-altitude proglacial lake, is located in ______.

A) Assam

B) Uttarakhand

C) Ladakh

D) Sikkim

ஷாகோ சோ ஏரி எனும் அதி உயர பனிப்பாறை ஏரி அமைந்துள்ள இடம் எது?

A) அஸ்ஸாம்

B) உத்தரகாண்ட்

C) லடாக்

D) சிக்கிம்

39. Myristica swamps are thriving in

A) Semi-Arid Region

B) Freshwater

C) Salt water

D) Brackish water

மிரிஸ்டிகா புதர்செடிகள் செழித்து வளரும் பகுதி எது?

A) பகுதி வறண்ட பகுதி

B) நன்னீர்

C) உப்பு நீர்

D) உவர் நீர்

40. The Rangpur-Sivasagar Historical Ensemble is located in

A) Maharashtra

B) Uttar Pradesh

C) New Delhi

D) Assam

ரங்க்பூர்-சிவசாகர் வரலாற்றுத் தொகுதி அமைந்துள்ள இடம் எது?

A) மகாராஷ்டிரா

B) உத்தரப் பிரதேசம்

C) புது டெல்லி

D) அஸ்ஸாம்

41. The Central Vigilance Commission was established in 1964 on the recommendation of _______.

A) 1st Administrative Reforms Commission

B) Jayaprakash Narayan Committee

C) Tarkunde Committee

D) Santhanam Committee

மத்திய ஊழல் கண்காணிப்பு அமைப்பு ஆணையம் (CVC) 1964 ஆம் ஆண்டில் எதன் பரிந்துரையின் பேரில் நிறுவப்பட்டது?

A) முதலாவது நிர்வாக சீர்திருத்தக் குழு

B) ஜெயபிரகாஷ் நாராயணன் குழு

C) தார்குண்டே குழு

D) சந்தானம் குழு

42. The Veera Vasantharayar Mandapam at the Meenakshi Amman Temple was built by

A) Chokkanatha Nayak

B) Rani Mangammal

C) Muthu Veerappa Nayak

D) Thirumalai Nayak

மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள வீர வசந்தராயர் மண்டபம் யாரால் கட்டப்பட்டது?

A) சொக்கநாத நாயக்கர்

B) ராணி மங்கம்மாள்

C) முத்து வீரப்ப நாயக்கர்

D) திருமலை நாயக்கர்

43. Uzbekistan becomes the ___________country to accept UPI Payments.

A) 10th

B) 11th

C) 14th

D) 15th

UPI கட்டண முறையை ஏற்கும் __________ வது நாடாக உஸ்பெகிஸ்தான் மாறியுள்ளது.

A) 10வது

B) 11வது

C) 14வது

D) 15வது

44. The Shilpa Sailesh Vs Varun Sreenivasan case 2023 is related to

A) Right to privacy

B) Complete justice

C) Colorable legislation

D) EWS Reservation

ஷில்பா சைலேஷ் எதிர் வருண் சீனிவாசன் வழக்கு 2023 எதனுடன் தொடர்புடையது?

A) தனியுரிமைக்கான உரிமை

B) முழுமையான நீதி

C) மறைமுகச் சட்டமியற்றல்

D) EWS இடஒதுக்கீடு

45. The North Eastern Council (NEC) was established in ______ at ______.

A) 1971, Shillong

B) 1972, Imphal

C) 1969, Agartala

D) 1976, Kohima

வடகிழக்கு மன்றம் எந்த ஆண்டில் எங்கு நிறுவப் பட்டது?

A) 1971, ஷில்லாங்

B) 1972, இம்பால்

C) 1969, அகர்தலா

D) 1976, கோஹிமா

46. The sustainable level of the debt-GSDP ratio for Tamil Nadu is_____ and current rate sits at _______.

A) 19% and 23%

B) 23% and 27%

C) 23% and 29%

D) 16 % and 23%

தமிழ்நாட்டின் கடன்-மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தின் நிலையான அளவு _____ மற்றும் தற்போதைய விகிதம் _______ ஆக உள்ளது.

A) 19% மற்றும் 23%

B) 23% மற்றும் 27%

C) 23% மற்றும் 29%

D) 16 % மற்றும் 23%

47. The term Mercator projection is related to

A) Selenography

B) Cartography

C) Hydrography

D) Orography

மெர்கேட்டர் திட்டம் (Mercator projection) என்ற சொல் எதனுடன் தொடர்புடையது?

A) நிலவு வரைவியல்

B) வரைபடவியல்

C) நீரியல் வரைவியல்

D) மலை நிலவரைவியல்

48. Matsya Metri, an augmented-reality (AR) based mobile application used to measure the

A) Marine Plants

B) Fish resources

C) Hydrocarbons

D) Polymetallic Nodules

மத்சயமேத்ரி (MatsyaMetri) என்ற மிகையூட்டப்பட்ட மெய்ம்மை (AR) அடிப்படையிலான அலைபேசி செயலி எதனை அளவிடப் பயன்படுகிறது?

A) கடல் தாவரங்கள்

B) மீன் வளங்கள்

C) ஹைட்ரோ கார்பன்கள்

D) பல் உலோக முடிச்சுகள்

49. Who won the Men's Singles title at the ITF Men's World Tennis Tour M15?

A) Gunawan Trismuwantara

B) Isaac Becroft

C) Karan Singh

D) Ryotaro Taguchi

ITF ஆண்கள் உலக டென்னிஸ் தொடர் M15-இல் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டத்தை வென்றவர் யார்?

A) குணவான் த்ரிஸ்முவந்தாரா

B) ஐசக் பெக்ரோஃப்ட்

C) கரண் சிங்

D) ரியோடாரோ தகுச்சி

50. The high-powered Aravalli committee is chaired by

A) Jagdish Krishnaswamy

B) Rajendra Kumar Sharma

C) Kanchan Devi

D) Brij Mohan Singh

ஆரவல்லி குறித்த உயர்மட்டக் குழுவின் தலைவராக இருப்பவர் யார்?

A) ஜெகதீஷ் கிருஷ்ணசுவாமி

B) ராஜேந்திர குமார் சர்மா

C) கஞ்சன் தேவி

D) பிரிஜ் மோகன் சிங்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. | ***D*** | 27. | ***A*** | 28. | ***B*** | 29. | ***C*** | 30. | ***A*** | 31. | ***C*** | 32. | ***C*** | 33. | ***A*** | 34. | ***C*** | 35. | ***B*** |
| 36. | ***C*** | 37. | ***D*** | 38. | ***D*** | 39. | ***B*** | 40. | ***D*** | 41. | ***D*** | 42. | ***C*** | 43. | ***B*** | 44. | ***B*** | 45. | ***A*** |
| 46. | ***B*** | 47. | ***B*** | 48. | ***B*** | 49. | ***C*** | 50. | ***C*** | | | | | | | | | | |

51. The 4th edition of Exercise Samudra Laksamana was held between

A) India – Singapore

B) India – Australia

C) India – Malaysia

D) India – Thailand

சமுத்திர லட்சுமணா பயிற்சியின் 4வது பதிப்பு எந்த நாடுகளுக்கிடையே நடத்தப்பட்டது?

A) இந்தியா – சிங்கப்பூர்

B) இந்தியா – ஆஸ்திரேலியா

C) இந்தியா – மலேசியா

D) இந்தியா – தாய்லாந்து

52. The 6th All India Official Language Conference was held in

A) Mumbai

B) Kolkata

C) Bengaluru

D) Ahmedabad

6வது அகில இந்திய அலுவல் மொழி மாநாடு எங்கு நடைபெற்றது?

A) மும்பை

B) கொல்கத்தா

C) பெங்களூரு

D) அகமதாபாத்

53. The Tempest Programme is related to

A) Nuclear power

B) Submarine

C) Fighter jet

D) Missile

டெம்பஸ்ட் திட்டம் எதனுடன் தொடர்புடையது?

A) அணுசக்தி

B) நீர்மூழ்கிக் கப்பல்

C) போர் விமானம்

D) ஏறிகணை

54. The AlphaGenome AI model was released by

A) Microsoft

B) NVIDIA

C) Google

D) Apple

ஆல்ஃபாஜீனோம் செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியை வெளியிட்ட அமைப்பு எது?

A) மைக்ரோசாப்ட்

B) NVIDIA

C) கூகுள்

D) ஆப்பிள்

55. Which state celebrates Nuakhai Festival annually?

A) Jharkhand

B) Chhattisgarh

C) Bihar

D) Odisha

நுவாகாய் பண்டிகையை ஆண்டுதோறும் கொண்டாடும் மாநிலம் எது?

A) ஜார்க்கண்ட்

B) சத்தீஸ்கர்

C) பீகார்

D) ஒடிசா

56. The Nasha Mukt Bharat Abhiyan is related to

A) Skill development

B) Manual scavenging

C) Open defecation Prevention

D) De-Addiction

நஷா முக்த் பாரத் அபியான் எதனுடன் தொடர்புடையது?

A) திறன் மேம்பாடு

B) மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுதல்

C) திறந்தவெளியில் மலம் கழித்தலை தடுத்தல்

D) போதை மறுவாழ்வு

57. Historically and officially, Mayyun Island is administered by

A) Yemen

B) Iran

C) Oman

D) Dubai

நீண்டகாலமாகவும் அதிகாரப்பூர்வமாகவும், மய்யூன் தீவு யாரால் நிர்வகிக்கப்படுகிறது?

A) ஏமன்

B) ஈரான்

C) ஓமன்

D) துபாய்

58. Which one of the following is not a part of MERCOSUR now?

A) Argentina

B) Venezuela

C) Bolivia

D) Brazil

பின்வருவனவற்றில் தற்போது மெர்கோசூர் (MERCOSUR) அமைப்பின் ஒரு பகுதியாக இல்லாதது எது?

A) அர்ஜென்டினா

B) வெனிசுலா

C) பொலிவியா

D) பிரேசில்

59. Who has ranked first in India in blood donation for the third consecutive year?

A) Tamil nadu

B) Telangana

C) Maharashtra

D) Haryana

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தியாவில் ரத்த தானத்தில் முதலிடம் பிடித்து உள்ள மாநிலம் எது?

A) தமிழ்நாடு

B) தெலுங்கானா

C) மகாராஷ்டிரா

D) ஹரியானா

60. Article 351 of the Constitution is a part of

A) Part XIV

B) Part XVI

C) Part XVII

D) Part XXI

அரசியலமைப்பின் 351வது சரத்தானது எந்தப் பகுதியின் கீழ் வருகிறது?

A) பகுதி XIV

B) பகுதி XVI

C) பகுதி XVII

D) பகுதி XXI

61. Sir Thomas Munro was the Governor of the Madras Presidency from ____ to _____.

A) 1810 to 1817

B) 1815 to 1820

C) 1820 to 1827

D) 1822 to 1827

சர் தாமஸ் மன்றோ சென்னை மாகாணத்தின் ஆளுநராக ____ முதல் _____ ஆம் ஆண்டு வரை இருந்தார்.

A) 1810 முதல் 1817 வரை

B) 1815 முதல் 1820 வரை

C) 1820 முதல் 1827 வரை

D) 1822 முதல் 1827 வரை

62. Choose the correct pair of BRICS Summits.

A) 2025 – Rio de Janeiro

B) 2024 – Kazan

C) 2023 – Johannesburg

D) All the pairs are correct

பிரிக்ஸ் மாநாடுகள் குறித்த சரியான இணையத் தேர்ந்தெடுக்க.

A) 2025 – ரியோ டி ஜெனிரோ

B) 2024 – கசான்

C) 2023 – ஜோகன்னஸ்பர்க்

D) அனைத்து இணைகளும் சரியானவை.

63. What is the IUCN status of the world's smallest and rarest wild pig?

A) Critically Endangered

B) Endangered

C) Near threatened

D) Vulnerable

உலகின் மிகச்சிறிய மற்றும் அரியவகை காட்டுப்பன்றியின் IUCN அந்தஸ்து என்ன?

A) மிக அருகி வரும் இனம்

B) அருகி வரும் இனம்

C) அச்சுறு நிலையை அண்மித்த இனம்

D) எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்

64. International Day for South-South Cooperation is observed on

A) September 10

B) September 11

C) September 15

D) September 22

தெற்கு-தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம் எப்போது அனுசரிக்கப் படுகிறது?

A) செப்டம்பர் 10

B) செப்டம்பர் 11

C) செப்டம்பர் 15

D) செப்டம்பர் 22

65. Who won the 2026 US Open Men's Singles title?

A) Christian Harrison

B) Alexander Zverev

C) Ben Shelton

D) Neal Skupski

2026 ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றவர் யார்?

A) கிறிஸ்டியன் ஹாரிசன்

B) அலெக்சாண்டர் ஸ்வெரேவ்

C) பென் ஷெல்டன்

D) நீல் ஸ்குப்ஸ்கி

66. The Tumen River is delineating the boundaries between _______.

A) Myanmar, Laos, and Vietnam.

B) China, North Korea, and Russia

C) Mongolia, Russia, and North Korea

D) Kyrgyzstan, Tajikistan and Afghanistan

துமன் நதியானது எவற்றிற்கிடையேயான எல்லைகளை வரையறுக்கிறது?

A) மியான்மர், லாவோஸ் மற்றும் வியட்நாம்

B) சீனா, வட கொரியா மற்றும் ரஷ்யா

C) மங்கோலியா, ரஷ்யா மற்றும் வட கொரியா

D) கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான்

67. The 22nd edition of Yudh Abhyas was held between ________.

A) Japan – US

B) India – Japan

C) India – Australia

D) India – France

'யுத் அபியாஸ்' பயிற்சியின் 22வது பதிப்பு எந்த நாடுகளுக்கிடையே நடத்தப் பட்டது?

A) ஜப்பான் – அமெரிக்கா

B) இந்தியா – ஜப்பான்

C) இந்தியா – ஆஸ்திரேலியா

D) இந்தியா – பிரான்ஸ்

68. The legal basis for Corporate Social Responsibility provisions in India is provided by

A) Corporate Liability Act – 2008

B) The Companies Act – 2013

C) Corporate Law of India – 2026

D) None of the above

இந்தியாவில் பெருநிறுவனச் சமூகப் பொறுப்பு (CSR) விதிகளுக்கான சட்டப்பூர்வ அடிப்படையை வழங்கும் சட்டம் எது?

A) பெருநிறுவனப் பொறுப்புச் சட்டம் – 2008

B) நிறுவனங்கள் சட்டம் – 2013

C) இந்திய பெரு நிறுவனச் சட்டங்கள் – 2026

D) மேற்கண்ட எதுவுமில்லை

69. __________ is building the world's first artificial energy island in the _______.

A) Saudi Arabia in the Red Sea

B) Russia in Black Sea

C) Belgium in the North Sea

D) Turkey in the Mediterranean Sea

__________ உலகின் முதல் செயற்கை ஆற்றல் தீவை _______ இல் உருவாக்கி வருகிறது.

A) சவுதி அரேபியா செங்கடல்

B) ரஷ்யா கருங்கடல்

C) பெல்ஜியம் வட கடல்

D) துருக்கி மத்திய தரைக்கடல்

70. Choose the incorrect statement regarding the Unlawful Activities (Prevention) Act.

A) The Act applies to both Indian and foreign nationals.

B) Originally, the UAPA targeted "unlawful associations" related to secession.

C) The 2019 Amendment empowered the centre to designate individuals as terrorists

D) All the statements are correct.

சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இந்தச் சட்டம் இந்தியர்கள் மற்றும் வெளிநாட்டினர் இருவருக்கும் பொருந்தும்.

B) தொடக்கத்தில், இச்சட்டம் பிரிவினைவாதம் தொடர்பான "சட்டவிரோதச் சங்கங்களை" குறிவைத்தது.

C) 2019 ஆம் ஆண்டு திருத்தமானது தனிநபர்களைப் பயங்கரவாதிகளாக அறிவிக்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்தது

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

71. The Taklamakan Desert is situated in

A) China

B) Magnolia

C) Mali

D) Uganda

தக்லமக்கன் பாலைவனம் எங்கு அமைந்துள்ளது?

A) சீனா

B) மங்கோலியா

C) மாலி

D) உகாண்டா

72. Choose the incorrect statement regarding the National Dam Safety Authority.

A) It is a statutory body under the Dam Safety Act, 2021.

B) It is headed by a chairman and assisted by five members

C) It is headquartered in Kolkata

D) All the statements are correct.

தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இது 2021 ஆம் ஆண்டு அணை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.

B) இதற்கு ஒரு தலைவர் மற்றும் அவருக்கு உதவ ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர்.

C) இதன் தலைமையகம் கொல்கத்தாவில் அமைந்துள்ளது.

D) அனைத்துக் கூற்றுகளும் சரியானவை.

73. The recently discovered Ariosoma cmfriense is a species of

A) Snail

B) Crab

C) Eel

D) Prawn

சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அரியோசோமா சிம்ஃப்ரியென்சி (Ariosoma cmfriense) என்பது எந்த வகையைச் சேர்ந்தது?

A) நத்தை

B) நண்டு

C) விலாங்கு மீன்

D) இறால்

74. The Changthang Wildlife sanctuary is located in

A) Assam

B) Sikkim

C) Uttarakhand

D) Ladakh

சாங்தாங் வனவிலங்கு சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?

A) அசாம்

B) சிக்கிம்

C) உத்தரகண்ட்

D) லடாக்

75. The SPARSH Pension System is implemented by

A) Department of Ex-Servicemen Welfare

B) Department of Expenditure

C) Defence Accounts Department

D) Department of Financial Services

ஸ்பார்ஷ் (SPARSH) ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தும் துறை எது?

A) முன்னாள் படைவீரர் நலத் துறை

B) செலவினங்கள் துறை

C) பாதுகாப்பு கணக்குத் துறை

D) நிதிச் சேவைகள் துறை

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. | ***C*** | 52. | ***A*** | 53. | ***C*** | 54. | ***C*** | 55. | ***D*** | 56. | ***D*** | 57. | ***A*** | 58. | ***B*** | 59. | ***D*** | 60. | ***C*** |
| 61. | ***C*** | 62. | ***D*** | 63. | ***A*** | 64. | ***B*** | 65. | ***B*** | 66. | ***B*** | 67. | ***B*** | 68. | ***B*** | 69. | ***C*** | 70. | ***D*** |
| 71. | ***A*** | 72. | ***C*** | 73. | ***C*** | 74. | ***D*** | 75. | ***C*** | | | | | | | | | | |

76. Asia's first Telecom Manufacturing Zone will be set up in

A) Gandhi Nagar

B) Gwalior

C) Vizag

D) Indore

ஆசியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம் எங்கு அமைக்கப் பட உள்ளது?

A) காந்தி நகர்

B) குவாலியர்

C) விசாகப்பட்டினம்

D) இந்தூர்

77. The Chandni Chowk Town Hall was built by the ____________

A) Mughals

B) Marathas

C) Rajput

D) British

சாந்தினி சௌக் நகர மண்டபம் யாரால் கட்டப்பட்டது?

A) முகலாயர்கள்

B) மராத்தியர்கள்

C) ராஜபுத்திரர்கள்

D) ஆங்கிலேயர்கள்

78. Qdenga is a vaccine Developed to protect against__________

A) Malaria

B) Dirofilariasis

C) Dengue

D) Diphtheria

கியூடெங்கா (Qdenga) தடுப்பூசி எதற்கு எதிராக பாதுகாப்பை வழங்குவதற்காக உருவாக்கப் பட்டுள்ளது?

A) மலேரியா

B) டைரோஃபைலேரியாசிஸ்

C) டெங்கு

D) டிப்தீரியா

79. Choose the incorrect statement regarding the Inter-State Council.

A) It was established under Article 263 through the Inter-State Council Order, 1990.

B) It is not a permanent body by default.

C) It is headed by the Prime Minister of India.

D) All the statements are correct.

மாநிலங்களுக்கு இடையேயான சபை (Inter-State Council) தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இது 1990 ஆம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையேயான சபை உத்தரவின் மூலம் சரத்து 263-இன் கீழ் நிறுவப்பட்டது.

B) இது இயல்பாகவே ஒரு நிரந்தர அமைப்பு அல்ல.

C) இதன் தலைவராக இந்தியப் பிரதமர் செயல்படுகிறார்.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

80. Tamil Nadu State Organ Donation Day was observed on________

A) 21 September

B) 22 September

C) 23 September

D) 24 September

தமிழ்நாடு மாநில உடல் உறுப்பு தான தினம் எப்போது அனுசரிக்கப்பட்டது?

A) செப்டம்பர் 21

B) செப்டம்பர் 22

C) செப்டம்பர் 23

D) செப்டம்பர் 24

81. As per the 2023 Law, who is not a part of the selection committee of Election Commissioners?

A) Prime Minister

B) Union Cabinet Minister

C) Leader of Opposition

D) Chief Justice of India

2023 ஆம் ஆண்டு சட்டத்தின்படி, தேர்தல் ஆணையர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் அங்கம் வகிக்காதவர் யார்?

A) பிரதமர்

B) ஒன்றிய கேபினட் அமைச்சர்

C) எதிர் கட்சித் தலைவர்

D) இந்தியத் தலைமை நீதிபதி

82. The Narcotics Control Bureau (NCB) was established in _____

A) 1972

B) 1976

C) 1986

D) 1989

போதைப் பொருள் தடுப்புப் பிரிவு (NCB) எந்த ஆண்டு நிறுவப் பட்டது?

A) 1972

B) 1976

C) 1986

D) 1989

83. The Collegium system for appointing judges was institutionalised by

A) First Judges Case (1981)

B) Second Judges Case (1993)

C) Third Judges Case (1998)

D) NJAC Act

நீதிபதிகளை நியமிப்பதற்கான கொலீஜியம்/நீதிபதிகள் தேர்வுக் குழு (Collegium) முறை எதன் மூலம் நிறுவனமயமாக்கப்பட்டது?

A) முதல் நீதிபதிகள் வழக்கு (1981)

B) இரண்டாவது நீதிபதிகள் வழக்கு (1993)

C) மூன்றாவது நீதிபதிகள் வழக்கு (1998)

D) NJAC சட்டம்

84. The L.69 Group is related to

A) Disarmament

B) UNSC expansion

C) Uranium Export

D) Lithium Export

L.69 குழுமம் எதனுடன் தொடர்புடையது?

A) ஆயுதக் குறைப்பு

B) ஐநா பாதுகாப்பு சபை (UNSC) விரிவாக்கம்

C) யுரேனியம் ஏற்றுமதி

D) லித்தியம் ஏற்றுமதி

85. The Tamil Nadu Chief Minister's Breakfast Scheme was originally launched on

A) June 03, 2022

B) July 15, 2022

C) September 15, 2022

D) October 02, 2022

தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் முதன்முதலில் எப்போது தொடங்கப் பட்டது?

A) ஜூன் 03, 2022

B) ஜூலை 15, 2022

C) செப்டம்பர் 15, 2022

D) அக்டோபர் 02, 2022

86. The recommendation for the Inter-State Council was first made by

A) Venkatachaliah Commission

B) Sarkaria Commission

C) Administrative Reforms Commission

D) Rajamannar Committee

மாநிலங்களுக்கு இடையேயான சபைக்கான பரிந்துரையை முதலில் வழங்கியது எது?

A) வெங்கடாச்சலையா ஆணையம்

B) சர்க்காரியா ஆணையம்

C) நிர்வாகச் சீர்திருத்த ஆணையம்

D) ராஜமன்னார் குழு

87. Which one of the following is the 101st Ramsar site of India?

A) Shekha Jheel Bird Sanctuary

B) Chhari-Dhand Wetland

C) Glaw Lake

D) Surha Tal

பின்வருவனவற்றில் இந்தியாவின் 101-வது ராம்சர் தளம் எது?

A) சேகா ஜீல் பறவைகள் சரணாலயம்

B) சாரி-தந்த் ஈரநிலம்

C) கிளாவ் ஏரி

D) சுர்ஹா தால்

88. The third home for the cheetahs in India is being developed at the ________

A) Nauradehi Wildlife Sanctuary

B) Kuno National Park

C) Kanha National Park

D) Satpura Tiger Reserve

இந்தியாவில் சிறுத்தைகளுக்கான மூன்றாவது வாழிடம் எங்கு உருவாக்கப்பட்டு வருகிறது?

A) நௌராதேஹி வனவிலங்கு சரணாலயம்

B) குனோ தேசியப் பூங்கா

C) கன்ஹா தேசியப் பூங்கா

D) சாத்புரா புலிகள் காப்பகம்

89. Choose the incorrect pair.

A) Javan Rhinoceros – Critically Endangered

B) Sumatran Rhinoceros – Endangered

C) Greater One-Horned Rhino – Vulnerable

D) All the pairs are correct

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

A) ஜாவன் காண்டாமிருகம் – மிக அருகி வரும் இனம்

B) சுமத்ரா காண்டாமிருகம் – அருகி வரும் இனம்

C) பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் – எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

D) அனைத்து இணைகளும் சரியானவை

90. The $13^{th}$ edition of SLINEX-26 is the ________.

A) Bilateral Naval exercise

B) Military training operation

C) Bilateral air exercise

D) Tri-Service Exercise

ஸ்லினெக்ஸ்-26 (SLINEX-26) இன் 13வது பதிப்பு ஒரு ________.

A) இருதரப்புக் கடற்படைப் பயிற்சி

B) இராணுவப் பயிற்சி நடவடிக்கை

C) இருதரப்பு விமானப்படைப் பயிற்சி

D) முப்படைகளின் கூட்டுப் பயிற்சி

91. _______ had the lowest youth Not in Employment, Education or Training (NEET) rate in Tamil Nadu.

A) Kanchipuram

B) Coimbatore

C) Chennai

D) Tuticorin

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு, கல்வி அல்லது பயிற்சியில் இல்லாத (NEET) இளைஞர்களின் குறைந்த விகிதத்தைக் கொண்ட மாவட்டம் எது?

A) காஞ்சிபுரம்

B) கோயம்புத்தூர்

C) சென்னை

D) தூத்துக்குடி

92. Choose the incorrect statement regarding the Shanghai Cooperation Organisation.

A) It is a permanent intergovernmental international organisation founded on June 15, 2001.

B) India and Pakistan are the full-time members.

C) The Regional Anti-Terrorist Structure (RATS) is headquartered in Tashkent, Uzbekistan.

D) All the statements are correct.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்க.

A) இது 2001 ஆம் ஆண்டு ஜூன் 15 அன்று நிறுவப்பட்ட ஒரு நிரந்தர அரசுகளுக்கிடையேயான சர்வதேச அமைப்பாகும்.

B) இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை இதன் முழுநேர உறுப்பினர்கள் ஆவர்.

C) பிராந்திய பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பு (RATS) உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட்டைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை.

93. Greenland, the world's largest island, is an autonomous territory of ______

A) Iceland

B) UK

C) Denmark

D) Norway

உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, எந்த நாட்டின் தன்னாட்சிப் பகுதியாகும்?

A) ஐஸ்லாந்து

B) இங்கிலாந்து

C) டென்மார்க்

D) நார்வே

94. The Indian National Centre for Ocean Information Services (INCOIS) works under _________.

A) Ministry of Communications

B) Ministry of Earth Sciences

C) Ministry of Electronics and Information Technology

D) Ministry of Information and Broadcasting

இந்தியத் தேசிய கடல்சார் தகவல் சேவைகள் மையம் (INCOIS) எந்த அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது?

A) தகவல் தொடர்பு அமைச்சகம்

B) புவி அறிவியல் அமைச்சகம்

C) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

D) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம்

95. Choose the incorrect pair.

A) World Wetlands Day – February 02

B) International Earth Day – April 22

C) International Day of Clean Air for Blue Skies – September 22

D) World Water Day – March 22

தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

A) உலக ஈரநிலங்கள் தினம் – பிப்ரவரி 02

B) சர்வதேச பூமி தினம் – ஏப்ரல் 22

C) நீல வானங்களுக்கான தூய்மையான காற்றின் சர்வதேச தினம் – செப்டம்பர் 22

D) உலக நீர் தினம் – மார்ச் 22

96. The Year of Shared Horizons – 2027 will be observed by

A) India - Japan

B) India - Canada

C) India - France

D) India – Australia

பகிரப்பட்ட எல்லைகளின் ஆண்டு – 2027 (Year of Shared Horizons) யாரால் அனுசரிக்கப் படுகிறது?

A) இந்தியா - ஜப்பான்

B) இந்தியா - கனடா

C) இந்தியா - பிரான்ஸ்

D) இந்தியா – ஆஸ்திரேலியா

97. Sohar Port, a deep-sea commercial port, lies in the _______.

A) Gulf of Aden

B) Persian Gulf

C) Gulf of Aqaba

D) Gulf of Oman

ஆழ்கடல் வணிகத் துறைமுகமான சோஹர் துறைமுகம் எங்கு அமைந்துள்ளது?

A) ஏதேன் வளைகுடா

B) பாரசீக வளைகுடா

C) அகாபா வளைகுடா

D) ஓமன் வளைகுடா

98. The Changthang Wildlife Sanctuary is located in ______.

A) Assam

B) Mizoram

C) Ladakh

D) Tripura

சாங்தாங் வனவிலங்கு சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?

A) அசாம்

B) மிசோரம்

C) லடாக்

D) திரிபுரா

99. The report named 'Reimagining Skilling for Viksit Bharat@2047' was released by

A) SBI

B) RBI

C) NITI Aayog

D) NSO

'Reimagining Skilling for Viksit Bharat@2047' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

A) SBI

B) RBI

C) நிதி ஆயோக்

D) NSO

100. The 'Gender Snapshot 2026' report was released by

A) World Bank

B) World Economic Forum

C) UN DESA

D) ECOSOC

'Gender Snapshot 2026' என்ற அறிக்கையை வெளியிட்ட அமைப்பு எது?

A) உலக வங்கி

B) உலகப் பொருளாதார மன்றம்

C) UN DESA

D) ECOSOC

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 76. | ***B*** | 77. | ***D*** | 78. | ***C*** | 79. | ***D*** | 80. | ***C*** | 81. | ***D*** | 82. | ***C*** | 83. | ***C*** | 84. | ***B*** | 85. | ***C*** |
| 86. | ***B*** | 87. | ***C*** | 88. | ***A*** | 89. | ***B*** | 90. | ***A*** | 91. | ***B*** | 92. | ***D*** | 93. | ***C*** | 94. | ***B*** | 95. | ***C*** |
| 96. | ***A*** | 97. | ***D*** | 98. | ***C*** | 99. | ***C*** | 100. | ***C*** | | | | | | | | | | |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★